வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.6394/அ5/2025 நாள்.05.01.2026

பொருள் பள்ளிக் கல்வி – அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் இடிக்கப்பட வேண்டிய கட்டிட விவரங்கள் – TNSED Administrative App -ல் பதிவேற்றம் செய்ய அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை சென்னை-06 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (இடைநிலை) செயல்முறைகள்.
ந.க.எண்.081813/என்2/இ1/2025, நாள்.23.12.2025

பார்வையில் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் நீண்ட காலத்திற்கு முன்பு கட்டப்பட்ட பயன்படுத்த முடியாத வகுப்பறைகள்(Classrooms). கழிப்பறைகள் (toilets) மற்றும் பழுதடைந்த பள்ளி சுற்றுச்சுவர் (compound wall) உள்ளதாக அறியப்படுகிறது. எனவே, இவ்வாறு பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே மாணவர்களின் பாதுகாப்பு கருதி பழுதடைந்த நிலையிலுள்ள இடிக்கப்பட வேண்டிய பள்ளிக் கட்டிடங்களின் விவரங்களைகீழ்கண்டவாறு TNSED Administrative App-ல் பதிவேற்றம் செய்ய அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. TNSED Administrative App-ஐ Google Play Store – இல் தரவிறக்கம் செய்து கொள்ளவும்.
2. பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களது பயனர் குறயீடு (User ID) கடவுச்சொல் (Password) பயன்படுத்தி உள்நுழையவும்.
3. Civil Inspection என்ற உருவத்தினை (icon) சொடுக்கவும்.
4. கள ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்ட இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரங்கள் திரையில் தோன்றும்.
5. இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பெயரினை சொடுக்கவும்.

கட்டிடம் இடிக்கப்பட்டதா, இடிக்கப்பட்டு அகற்றப்பட்டதா உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும், உரியனவற்றை தெரிவு செய்து அதற்குரிய புகைப்படத்தினை பதிவேற்றம் செய்திட வேண்டும். கூடுதலாக வேறு ஏதேனும் கட்டிடங்கள் இடிக்கப்பட வேண்டுமெனில் அது குறித்து விவரங்களையும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட TNSED Administrative App-ல் பதிவுகளை 20.01.2026க்குள் முடிக்குமாறு அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி
தலைமை ஆசிரியர்கள்